# 6 தொகுதிகளின் வேட்பாளரைக் கூட்டணி தெரிவு செய்தது!

பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு
The EELANADU

மலர்: 19 சித்திரை 10 ஜா அவ்: 2 இதழ்: 70
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-4-77

கொழும்பு, வியாழன் தமிழர்விடுதலைக் கூட்டணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிறுத்தவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் இதுவரை ஆறு தொகுதிகள் பற்றி முடிவு செய்துவிட்டது.

ஆனால் இன்று வெள்ளிக்கிழமையும் வேட்பாளர் தெரிவுக்குழு கூடி மற்றும் தொகுதிகள் பற்றியும் முடிவு செய்ய வேண்டியிருப்பதால் தீர்மானிக்கப்பட்ட ஆறுதொகுதிகள் பற்றியும் இப்போது வெளியிடுவதற்கில்லை என்று வேட்பாளர் குழுப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறினார்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. எம். சிவசிதம்பரத்தின் இல்லத்தில் இன்று காலை 9-15க்கு வேட்பாளர் தெரிவுக்குழு கூடியது.

திருவாளர்கள் எஸ். தொண்டமான், அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், கா. சிவசிதப்பரம், சி. கதிரவேலுப்பிள்ளை, டாக்டர் உதுமான்லெப்பை, ஜெஸ்டிவாஸ் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பிற்பகல் 1-30 வரை நடந்த ஆலோசனை பின்னர் மாலையிலும் நடைபெற்றது.

வடபகுதித் தொகுதிகள் தான் முதலில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

மன்னாரைச் சேர்ந்த திரு. ஜோன்மாக்கும் கவிஞர் காசி ஆனந்தனும் அங்கு வந்து சில நிமிஷங்களின் பின் வெளியே சென்றனர்.

திருக் கோணமலையிலிருந்து திரு. பா. நேமிநாதனினது ஆதரவாளர்கள் கோஷ்டியொன்றும் திரு. அ. தங்கத்துரையின் ஆதரவாளர்கள் கோஷ்டியொன்றும் வந்திருந்தனர். அவர்களை அங்கிருந்து போகும்படி திரு. அமிர்தலிங்கம் கூறியதும் அவர்கள் சென்றுவிட்டனர்.

மாலையில் கிழக்கு மாகாணத் தொகுதிகள் சில பரிசீலனை செய்யப்பட்டதாகவும் கூட்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில்

# கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடாது!

# கூட்டணி முற்போக்கு வேட்பாளரை ஆதரிக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

**மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தமாட்டாது.**

யாழ். மாவட்டத்திலுள்ள தொகுதிகளுக்கு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வேட்பாளர்களை நிறுத்துவதில்லையெனகட்சியின் மத்திய குழுவுக்குச் சிபார்சு செய்வதென்று யாழ். மாவட்டக் குழுவின் நிர்வாக சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

''எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி சுயாட்சி அடிப்படையில் கையாளும் கொள்கைகளைப் பொதுமக்களுக்கு விளங்கவைக்கவும், இதே கொள்கைகளை ஏற்று ஏகாதிபத்திய எதிர்ப்பு முனையில் இலங்கையின் சகல முற்போக்கு சக்திகளையும் ஆதரிக்கும் வேட்பாளர்களை ஆதரிப்பதேயன்றி யாழ். மாவட்டத்தில் எமது கட்சி வேட்பாளர்களை நிறுத்துவதில்லையென்று மத்தியகுழுவுக்குச் சிபார்சு செய்கின்றது'' என்ற தீர்மானம் கட்சியின் யாழ். மாவட்டக் குழுவின் காரியநிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இம்மாதம் 19-ம் தேதி நடைபெற்ற காரிய நிர்வாக சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இவ்வருட மேதின விழாவை தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணித் தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து நடத்துவது; இதற்

(8-ம் பக்கம் பார்க்க)

### வி. பி. அமைப்பாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக திரு. வி. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### திருமதி ஞ சூ என். லாய்க்கு பிரதமர் பாராட்டு

கொழும்பு, வியாழன்

அமரர் சூ. என். லாயின் பாரியார் தென்யுன்-சாவோ- அம்மையார் சீனவரலாற்றில் அண்மைக்காலத்தில் குறிப்பிடத்தக்க சேவையாற்றியுள்ளார் என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராட்டியுள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் திருமதி சூ-என்-லாயைக் கௌரவிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் பேசினார்.

சீன விடுதலைப் போராட்டத்தின்போது பங்கெடுத்த பெண்களில் உயிர் தப்பியுள்ள 30 பெண்களுள் திருமதி சூ-என்-லாயும் ஒருவர் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

தமது கணவருடன் சேர்ந்து போராட்டத்தில் குதித்த மாபெரும் தலைவி தென்யுன்-மாவோ-அம்மையார் என்று பிரதமர் கூறினார். (ஆ)

# 5 வாரங்களில் பேரவை கலையும்!

கொழும்பு, வியாழன்

இன்னும் ஐந்து வாரங்களில் பேரவை கலைக்கப்படுமென்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சிறி லங்கா சுதந்திரக்கட்சித் தொழிசங்கப் பிரதிநிதிகள் மத்தியில் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

மே மாதம் 19-ந் திகதி பேரவை கூடும். அடுத்த நாளும் பேரவைக் கூட்டம் நடைபெறும். ஆனால் இந்த இரண்டு தினங்களுக்குள்ளும் முக்கியமான மசோதா எதுவும் நிறைவேற்ற முடியாது என்றும் பிரதமர் கூறியதாகத் தெரிகிறது. (ம)

### சிரிப்புச் சொட்டு



ஆண்: எங்க கட்சி உங்க வீட்டடியால் ஊர்வலம் வரும். படலையில் நிறைகுடம் வையுங்கோ.

பெண்: தேங்காய்க்குப் பதிலாக வேறேதும் நிறைகுடத்தில் வைக்கலாமா?

-சுந்தர்-

### மேதின விழா சேர்ந்து நடைபெறும்!

கொழும்பு, வியாழன்

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்த் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவை இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் தொழிற்சங்கங்களையும் சேர்த்து யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடத்துவது நிச்சயமென்றும் பொதுக் கூட்டம் திரு செல்லத்தம்பு தலைமையில் நடைபெறுமென்றும்இதுசம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நீக்கப்பட்டு விட்டனவென்றும் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ம)

# கூட்டணி மேதின அமைப்புக்குழு நிர்வாகிகள் ராஜினாமா

யாழ்ப்பாணம், வெள்ளி

**தமிழர் விடுதலைக் கூட்டணி மேதினக் கொண்டாட்ட அமைப்புக் குழுத் தலைவர் பொதுச் செயலாளர், அமைப்புச் செயலாளர் ஆகியோர்தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டனர்.**

அமைப்புக் குழுவின் தலைவர் திரு. மு. ஆலாலசுந்தரம் பொதுச்செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம், அமைப்புச் செயலாளர் திரு. சிவமகாராஜா ஆகியோர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

மேதின ஏற்பாடுகள் சம்பந்தமாகத் தமிழ்த் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் திரு எக்ஸ் எம். செல்லத்தம்புவுக்கும் மேதின அமைப்புக் குழுவினர் சிலருக்குமிடையில் ஏற்பட்ட வேறுபாடே இவர்களது ராஜினாமாவுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

''கட்சிக்குள் உருவாகி வந்துள்ள உட் பூசலே இவையெல்லாவற்றுக்கும் காரணம்'' என்று கூட்டணிப்பிரமுகர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

### சேர்ப்பதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியும்தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியும் ஒன்றிணைந்து நடாத்தவிருக்கும் மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கங்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று கூறும் தீர்மானம் ஒன்று தமிழ்த் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த சம்மேளனத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது.

# வரி விளம்பரம்

## தேவை

அக்கராயன்குளம் காந்திக் கிராமம் வாலிபர் விவசாய பயிற்சித் திட்டத்தில் பணியாற்ற தகுதி உள்ள குண்டசாலை விவசாய பயிற்சியாளர் (ஆண்) ஒருவர் தேவை. பொதுச் செயலாளர் அகில இலங்கைக் காந்திசேவா சங்கம், காந்திநிலையம், உருத்திரபுரம். 5970

சேலை அச்சடிக்கப் (Textile Printing) பழகி வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் உடனடியாகத் தேவை. நிலையத்துக்கு அண்மையிலிருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். பயிற்சிக்காலத்திலும் வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். வசந்தா ரெக்ஸ்ரயில்ஸ், 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 5943

## தேவை

எமது சங்கத்தால் ஸ்கிறீன் புடவை அச்சிடும் முறையில் புடவை அச்சடிப்பதற்கு டிசைன்கள் தேவை. வரையப்படும்டிசைன்கள் 18''x9'' அளவுள்ள வரைபடத்தாளில் ஒன்று தொடக்கம் நான்கு வரையிலான வர்ணங்கள் தீட்டக்கூடியதாக அமைதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் டிசைன்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50/- வழங்கப்படும். டிசைன்களை தலைவர், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 10/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 5-5-77-ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். தலைவர். 5977

## தேவை

தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்ய தென்னந் தோட்ட வேலை அனுபவம் உள்ள மூன்று குடும்பங்கள் தேவை. தொடர்புகொள்ளவும்: சி. நா. நடராஜா, தட்டுவன் கொட்டி தோட்டம், பளை. 5952

யாழ். நகரில் உள்ள ஒரு பிரபல ஸ்ருடியோவிற்கு ஒரு பெண் காசாளர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவரும், ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5966, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 5966

# சாவகச்சேரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## காரியாலயப் பதவி வெற்றிடங்கள்

| பதவி | தரம் | வயது | வேதனம் |
|---|---|---|---|
| 1. பொது முகாமையாளர் | III | 23-50 | 340/- 15×10/ 20×5=590/- |
| 2. கணக்காளர் | III | 23-40 | 300/-12.50×10/15×5=500/- |
| 3. காசாளர் | II | 20-35 | 200/- 8×10 /12.50×8=380/- |
| 4. சில்லறைப் பண்டகசாலை மேற்பார்வையாளர் | II | 22-35 | 250/- 8×10/ 10×6 = 390/- |

## மின்தறி நெசவாலை வெற்றிடங்கள்

| பதவி | வேதனம் | வயது | தராதரம் |
|---|---|---|---|
| 1. முகாமையாளர் (ஆண்) | தகுதிகாண்காலம் ஒருவருடத்துக்கு மாதமொன்றுக்கு சகல படிகளுமுட்பட ரூபா 200/- நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் ரூபா 250/-10×10=350/- யாவுமுட்பட. | 25-40 | க. பொ. த. (சாதாரணம்) இருமுறையில் 6 பாடங்கள் எண்கணிதம் அல்ல கணிதமுட்பட நெசவு வேலையில் 3 வருட அனுபவம். |
| 2. மேற்பார்வையாளர் (இருபாலாரும்) | தகுதிகாண் காலம் ஒரு வருடத்திற்கு மாதமொன்றுக்கு சகல படிகளுமுட்பட ரூபா 200/- நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் ரூபா 200/-10×10=300/- யாவுமுட்பட. | 25-35 | க. பொ. த. (சாதாரணம்) இருமுறையில் 6 பாடங்கள் எண்கணிதம் அல்லது கணிதமுட்பட நெசவு வேலையில் இருவருட அனுபவம். |
| 3. களஞ்சியப் பொறுப்பாளரும் இலிகிதரும் (ஆண்) | தகுதிகாண் காலம் ஒருவருடத்திற்கு மாதமொன்றுக்கு சகல படிகளுமுட்பட ரூபா 200/- நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் ரூபா 200/-10×7 50=275/- | 25-40 | க. பொ. த. (சாதாரணம்) இரு முறையில் 6பாடங்கள் எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட கணிக்கியலில் இரண்டுவருட அனுபவம். தட்டெழுத்து அறிவுடையவர் முன்னுரிமை பெறுவர். |
| 4. இயந்திர இணைப்பாளர் (ஆண்) | தகுதிகாண் காலம் ஒருவருடத்திற்கு மாதமொன்றுக்கு சகல படிகளுமுட்பட ரூபா 100/- நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் ரூபா 175/-10×7.50-250/- யாவுமுட்பட. | 20-35 | கனிஷ்ட தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி. இயந்திர அல்லது பொறியியல் தொழிற்சாலையில் 3 வருட அனுபவம். |
| 5. தொழிலாளர் (ஆண்) | 150-5×10/ 6×2=212/- | 25-35 | கனிஷ்ட தராதரப்பத்திரம் |
| 6. காவலாளர் (ஆண்) | 150-5×10/ 6×2=212/- | 30-40 | கனிஷ்ட தராதரப்பத்திரம் காவல் வேலையில் அனுபவம் விரும்பத்தக்கது. |
| 7. நெசவாளர் (இருபாலாரும்) | துண்டுவீதச்சம்பளம் சிறு கைத்தொழில் இலாகாவால் நிர்ணயிக்கப்படும். | 18-30 | கனிஷ்ட தராதரப்பத்திரம் கைத்தறிநெசவில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. |

மேற் குறிப்பிட்ட பதவிகள் சம்பந்தமாக இலங்கைப்பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### வசிப்பிடத்தகைமை:

குறைந்தளவு இரண்டு வருடங்களாவது இந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

### வயதெல்லை:

தற்போது நிரந்தரமான கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு வயதெல்லை நியதி இல்லை.

### விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:

சங்கம் வழங்கும் விண்ணப்பப்படிவம் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தியாக்கப்பட்டு 7-5-77க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் தலைவர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். படிவம் ஒன்று 50 சதம்.

### தராதரங்கள்:

தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவற்றையும் பெறுவதற்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் முத்திரை ஒட்டிய சொந்தமுகவரியிட்டப்பட்ட கடித உறை அனுப்பிப் பெற்றுக் கொள் ...

தலைவர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி.
20-4-1977.
5965

## தேவை

காசாளர் பதவிக்காக க. பொ. த. வரை படித்தவர்கள் தேவைப்படுகிறார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரடியாக உடன் தொடர்பு கொள்ளவும். அற்லஸ் இன்டஸ்றீஸ் (யாழ். வீரமாகாளி அம்மன் கோவில் முன்பதாக) யாழ்ப்பாணம். 5972

எமதுசங்கத்திற்கு 2''×2½'' அளவுகொண்ட, கைத்தறித் துறையையும், கூட்டுறவுத் துறையையும், யாழையும் பிரதிபலிப்பதாக அமைந்த வியாபாரக்குறி தேவை. தெரியப்பெறும் குறிக்கு ரூபா 100/- வழங்கப்படும். வியாபாரக் குறியை வரைபடத்தாளிற் தெளிவாகக்கீறி தலைவர், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 10/1, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 5-5-77-ந்திகதிக்குமுன் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்- தலைவர். 5978

ஆங்கில அறிவுடைய 30 வயதுக்கு மேற்பட்ட நம்பிக்கையான காவற்காரர் தேவை. உடனே நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் மனுச் செய்க. அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163 கண்டிவீதி, யாழ்ப்பாணம். 5979

15 முதல் 30 லாச்சம் பண்படுத்தப்பட்ட அல்லது பண்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வசதியான விவசாயக்காணி விலைக்குத்தேவை. கடித மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 5971, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5971

முல்லைத்தீவில் கடமையாற்ற உடனடியாக பாதுகாப்பு சேவையாளர்கள் தேவை. New Maths படிப்பிக்க ஆற்றலிருப்பின் விரும்பத்தக்கது. நேரில் 23-4-77 லில 10 மணிக்கு விண்ணப்பத்துடன் வரவும்: நிர்வாகி, வவனியா வர்த்தகசேவை, குமரன் டூரியஸ்ட் இன், 67, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 5982

## பயிற்சி

வெல்டிங், வயறிங், றேடியோ மேல்நாட்டு முறையில் காலை பிற்பகல், மாலைநேரப் பயிற்சிகள் NIET, 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5931

## சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### சாக்கு விற்பனை

இச்சங்கத்தில் 7,000 வெற்றுச்சாக்கு விற்பனைக்கிருக்கின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளைச் சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தில் 27-4-77 முற்பகல் 11 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் மெழுகிட்ட தபாலுறையில் ''சாக்குக் கேள்விப்பத்திரம்'' என எழுதி அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்களை வைப்புப்பணம் ரூபா 300/-ம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தி 26-4-77 வரை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி,
19-4-77. 5963

## தவறிவிட்டது

20—4—77 மாலை 6-30 பாதைஇலக்கம் 768 (யாழ்ப்பாணத்தில் இருந்து கீரிமலை) உடைய பஸ்வண்டியில் 200/- பணம், புத்தகங்கள், குறிப்புக்கொப்பிகள், உடுப்புகள், திறப்பு முதலிய அடங்கிய சூட்கேஸ் காணமல்போய்விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு புத்தகங்கள், திறப்பு, கொப்பி ஆகியவற்றையாவது அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். வி. சிவதாஸ், மகாஜனக்கல்லூரி விடுதி, தெல்லிப்பளை. 5975

## சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### மின் இணைப்பு கேள்விவிளம்பரம்

இச்சங்கத்தின் 24 மின்தறி கொண்ட நெசவாலைக்கு மின் இணைப்பு வேலைகள் செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட மின் இணைப்பு ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன,

கேள்விகள் பொருட்களுக்குப் புறம்பாகவும், கூலிக்குப் புறம்பாகவும் விபரமாகத் தயாரிக்கப்பட்டு மெழுகிட்ட கடித உறையின் மேல் மூலையில் ''மின் இணைப்புக் கேள்வி'' என எழுதப்பட்டு பதிவுக்கடித மூலம் 30-4-77-க்கு முன் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். மேலும் விபரங்களை சங்கக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி,
20-4-77. 5964

## நினைவாஞ்சலி



செல்லர் கதிரித்தம்பி

தோற்றம்: 8—12—1922
மறைவு: 20—4—1976

மண்டைதீவு கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. செல்லர் கதிரித்தம்பி அவர்கள் 20—4—76ல்இறைவனடி சேர்ந்தார். நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும் எங்கள் வாழ்வில் ஒளிவிளக்காய் எங்கள் அன்புத்தெய்வம் மறைந்து 20—4—77 ஒருவருடம் பூர்த்தியாகும் வேளையில் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி அரியமணி.
பிள்ளைகள் லக்ஷ்மி, சந்திரவதனி, மதுரநாயகம், ஞானசேகரம், நிர்மலா, சாந்தன், நந்தினி, குமுதினி, சுதஜ மற்றும் உற்றார் உறவினர்.
5976

## தேவை

காஸ்ற் அயன் (Cast Iron) வார்ப்பு வேலையில் அனுபவமுள்ளவர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். சேவிகிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 5969

பாகிஸ்தானில்

# ஆர்ப்பாட்டம் உச்சக்கட்டம்: ஊரடங்குச் சட்டம் அமுல்!

## வேலை நிறுத்தத்திஞல் நிர்வாகம் பாதிப்பு
## 8 பேர் பலி!! கடைகள் சூறை

கராச்சி, ஏப். 21 பாகிஸ்தான் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலி பூட்டோவை ராஜிஞமா செய்யுமாறு கோரி கடந்த ஒன்றரை மாத காலமாக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் நேற்றைய பொதுவேலை நிறுத்தத்துடன் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.

இதை அடுத்து பாகிஸ்தானில் சில முக்கிய நகரங்களில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

அரசு எதிர்ப்பு – ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களிடையே பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டன.

கராச்சியிலேயே நிலைமை மோசமாக உள்ளன. பல அரசாங்க அலுவலகங்கள், கடைகள், பொதுச்சொத்துக்கள் என்பன சேதமாக்கப்பட்டன என்றும்பலவர்த்தகஸ்தாபனங்கள் சூறையாடப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்ததை அடுத்து பல வீதிகள் மூடப்பட்டுள்ளன என்றும் நிர்வாகம் முற்ருகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கராச்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டு வெளிநாட்டு விமானச்சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளனவாம். விமான நிலையப்பணியாளர்களுடன் சர்வதேச விமானிகளும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனராம்.

### 8 பேர் பலி!

கராச்சியில் இடம்பெற்ற கலவரத்தில் 8 பேர் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனுவின் முன்ஞள் பிரதமர் அமரர் சூ. என்-லாயின் பாரியார் டென்யின் சாவோ அம்மையாரும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அலரி மாளிகையில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். (ஆ)

## 5-வது டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியா வெற்றி
### வேகப் பந்து வீச்சு வீரர் சாதனை

ஜமேக்கா, ஏப்ரல் 21 பாகிஸ்தான் மேற்கிந்திய 5வது டெஸ்டில் மேற்கிந்தியா 140 ஓட்டங்களால் வெற்றி பெற்று நடந்துமுடிந்தடெஸ்ட் தொடரிலும் வெற்றிபெற்றுள்ளது.

5 டெஸ்டுகள் கொண்ட இத்தொடரில் 2வது டெஸ்டில் மேற்கிந்தியாவும் 4வது டெஸ்டில் பாகிஸ்தானும் வெற்றி பெற்றன. மற்றைய இரண்டு டெஸ்டுகளும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தன.

டெஸ்ட் தொடரின வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் 5வது டெஸ்டில் முதலில் துடுப்பாடிய மேற்கிந்தியா 280 ஓட்டங்களைப்பெற்றது. ஆரம்ப வீரர் 100 ஓட்டங்களைப் பெற்ருர். கிறீனிட்ஜ் அதனைத் தொடர்ந்து ஆடிய பாக். 198 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியா 359 ஓட்டங்களைப்பெற்றது. இந்த இன்னிங்ஸில் கிறீனிட்ஜ் 83 ஓட்டங்களைப் பெற்ருர். பாக் இரண்டாவது இன்னிங்ஸில் 301 ஓட்டடங்களைப்பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தது. உதவி காப்டன் அஸிஸ் இக்பால் 135 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட் தொடரில் ஆகக்கூடுதலாக 35 விக்கட்டுகளைக்கைப்பற்றிய மேற்கிந்திய புதிய வேகப் பந்து வீச்சு வீரர் குரெல்ற் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தி உள்ளார். (இ)

## 39 உறுப்பினர்கள் கொண்ட புதிய மந்திரிசபை
### மகாராஷ்டிரத்தில் பதவி ஏற்பு

பம்பாய், ஏப்ரல் 21 மகாராஷ்டிரத்தில் 39 உறுப்பினர்களைக்கொண்ட காங்கிரஸ் அரசு இன்று காலை பதவி ஏற்றது.

திரு. வசந்திரா பட்டேல் தலைமையிலான இந்த மந்திரி சபையில் இரு பெண்கள், 2 ஆதிவாசிகள் 2 ஹரிஜனர்கள் ஆகியோர் அடங்குவர்.

மாநில அரசுகளின் மந்திரி சபையில் இதுவே ஆகக்கூடுதலான அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரி சபையாகும். (இ)

சிறையில் காணுமற்போன

## மாணவன் ராஜனைகோர்டில் ஆஜராக்க முடியவில்லை
### கேரள அரசு கைவிரிப்பு

திருவனந்தபுரம், ஏப். 21 சிறையிலிருந்து காணுமற்போன என்ஜினியரிங் கல்லூரி மாணவர் ராஜனைத் தம்மால் உயர்நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய முடியவில்லை என்று கேரள அரசு, நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. அரசின் பாதுகாப்பிலோ, கட்டுப்பாட்டிலோ, காவலிலோ மாணவர் ராஜன் இல்லையென்றும் கேரள முதன் மந்திரி திரு. கருணுகரன் தெரிவித்தார்.

கடந்தவருடம் மார்ச்மாதம் சிறைவைக்கப்பட்ட இந்த மாணவர் சிறையிலிருந்து காணுமற் போனதையடுத்து அவரைஉயர்நீதிநீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறுகேரளமுதன் மந்திரிதிரு.கருணுகரனுக்குகேரளஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக நான்கு பொலிஸ்இன்ஸ்பெக்டர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதும் தெரிந்ததே.

### இன்னுமொரு மாணவரைக் காணவில்லை

இதேவேளையில் கடந்த வருடம் சிறைப்பிடிக்கப்பட்ட இன்னுமொரு மாணவரான விஜயனைக் காணவில்லை என்று விஜயனின் தகப்பனுர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன பொலிசில் புகார்செய்துள்ளார்.






காங்கிரஸ் தோல்வியுற்ற 9 மாநிலங்களில்

# ஜனதிபதி ஆட்சி வந்தாலும் விரைவில் தேர்தல் நடக்கும்

## மக்களின் மதிப்பைப் பெருவிடின் ஆட்சி நடத்தமுடியாது என்றுகூறுகிருர் சரண்சிங்

புதுடில்லி, ஏப்ரல் 21 லோகசபையில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்த மாநிலங்களின் அரசுகள் கலைக்கப்பட்டு அங்கு ராஷ்டிரபதி ஆட்சி அமுல்செய்யப்பட்டாலும் அங்கெல்லாம் விரைவில் தேர்தல் நடைபெறும்.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் தெரிவித்தார்.

காங்கிரஸ் தோல்விஅடைந்த 9 மாநிலங்களிலும் விரைவில் ராஷ்டிரபதி ஆட்சி அமுல் செய்யப்படவேண்டியநிலை ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல்சாஸன அடிப்படையில் ஜனநாயக ரீதியில் குறிப்பிட்ட 9 மாநிலங்களிலும் மக்களின் கட்டளைகளைப்பெறும் நோக்குடனேயே தாம் அம் மாநில அரசுகளைக்கலைக்குமாறு கோரியதாகவும் கடமைகளைச் சரிவரச் செய்யாத முதல் அமைச்சர்கள் கண்டனத்துக்குள்ளாவார்கள் என்றும் அவர் கூறினர்.

திரு. சரண்சிங் மேலும் கூறியதாவது;

### நிச்சயமில்லா நிலைக்கு முற்றுப்புள்ளி

குறிப்பிட்ட மாநிலங்களில் நிச்சயமில்லாத நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடனேயே இந்தஆலோசனை வழங்கப்பட்டது இதுஅரசியல் சாஸனத்துக்கும் ஜனநாயக அடிப்படைக்கும் முரணுனது அல்ல.

எமது இந்த யோசனை சட்ட நுட்பமோ அரசியல் அனுகூலமோ அல்ல. அறநெறி அடிப்படையிலேயே இதை நாம் சிந்திக்கிருேம். மக்களின்

(6-ம் பக்கம் பார்க்க)

# சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வேண்டும்

புதுடில்லி, ஏப். 21 9 மாநில அரசுகளைக்கலைக்கும் உள்துறை அமைச்சரின் ஆலோசனையை சுப்ரீப்கோர்ட்டின் தீர்ப்புக்குவிடவேண்டும்.

இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ஏ. ஆர். அந்துலே கூறியுள்ளார்.

இதேசமயம் அமைச்சர் சரண்சிங்கின் ஆலோசனை இந்திய அரசியல் சாசனத்திற்கு அமையவே உள்ளது என்று மத்தியசட்ட அமைச்சர் திரு. சாந்திபூஷண் தெரிவித்துள்ளார். (இ)


மலேஷியன் கை மார்க்
சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்,
கொழும்பு-10
போன்: 24261—5.

### மணிவாக்கு

கடவுளைச்சாட்சியாய் வைத்துக்கொண்டு எண்ணியும், பேசியும், செயலாற்றியும் வருபவன் சரியானதைச் செய்வதற்கு அஞ்சான்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANADU

# தமிழ்நாடும் ஈழநாடும்

"உலகில் சின்னஞ்சிறிய நாடுகள்கூட விடுதலைபெற்றிருக்கின்றன. மிகச்சிறுபான்மையான இனம்கூட உலக அரங்காகிய ஐக்கிய நாடுகள் சபையில் குரல் கொடுக்கிறது. ஆனால் பாராண்ட பழம் பெருமை வாய்ந்த தமிழினத்திற்கு விடுதலை இல்லை; அந்த இனத்தின் குரல் உலகஅரங்கில் ஒலிக்கவில்லை. இந்த நிலைமாறவேண்டும். தமிழினம் விடுதலைபெறவேண்டும்."

தமிழ்த்தலைவர்கள் இப்படி மேடைகளில் பேசிவருகிறார்கள். தமிழினத்துக்கு விடுதலைவேண்டும்; அந்த இனத்துக்கென ஒரு நாடு வேண்டும் என்று இளைஞர்கள் துடிக்கிறார்கள்.

உலகில் இன்று "தமிழ் நாடு" என்று ஒன்று இருக்கிறது.

'மதராஸ்ஸ்டேட்' 'சென்னை மாநிலம்' என்று அழைக்கப்பட்டு வந்ததைத் 'தமிழ்நாடு' என்று உலகப் படத்தில் இடம்பெறச் செய்தவர் அமரர் பேரறிஞர் சி. என். அண்ணாதுரை.

திராவிடமுன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து மிகக்குறுகிய காலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்துடன் வளர்த்து அதை ஆட்சிபீடத்தில் அமர்த்தியவர் அறிஞர் அண்ணா.

அண்ணா மறைந்த பின் அவரது தம்பிமார்கள் அவர் காட்டிய வழியில் செல்வார்களென்றும் தமிழ்நாடு மீண்டும் பழையபெருமையும் புகழும்பெறும் என்றும் உலகில் பரந்து வாழும் தமிழர்கள் நினைத்தார்கள்.

ஊழல் குற்றச்சாட்டுக்களின் மீது கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழ்நாட்டில் ஆட்சிபீடத்திலிருந்த திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது.

கழகத்துக்குள்ளேயே போட்டியும் பூசலும்.

கழகத்திலிருந்து வெளியேறியவர்களும் கழகத்தை ஒழித்துக்கட்டுவதில் முனைந்தார்கள்.

இப்பொழுது கழகத்தை ஸ்தாபித்துக்கட்டி வளர்த்தவர்களில் ஒருவரான நாவலர் நெடுஞ்செழியனே கழகத்தை விட்டு வெளியேறியிருக்கிறார்.

கழகத்திலிருந்து வெளியேறிய சிலருடன் புதிய கட்சி ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

நாவலர் நெடுஞ்செழியனின் ராஜினமா தமக்கு அதிர்ச்சியளித்திருக்கிறதென்றுகூறிய கழகத்தலைவரும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான, திரு. கருணாநிதி "நேற்றுவரை என்னுடன் ஒரு விருக்கும் பொதுச்சபைக் கூட்டத்தின் ஏற்பாடுகள் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தவர் இன்று சந்திக்க வருவதாகச் சொல்லிவிட்டு அவருக்காக நானும் பொருளாளரும் காத்துக்கொண்டிருக்க ராஜிஞமாக் கடிதம் அனுப்புகிறாரே" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தனது தலைமையை விரும்பாவிட்டால் தான் கீழிறங்கு வதாகக்கூட கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

இந்திரா அமைச்சரவையிலிருந்து கடைசி நேரத்தில் திடீரென்று ராஜினமாச் செய்த ஜெகஜீவன்ராமைப் போல் நெடுஞ்செழியனும் நடந்து கொண்டிருக்கிறார்.

ஆனால் கருணாநிதி தலைமைப்பதவியிலிருந்து இறங்குவதாகச் சொன்ன பின்பும் நெடுஞ்செழியன் கழகத்தைக் கைவிட்டுப் புதிய கட்சி அமைக்கப் போகிறேன் என்று சொல்வது ஏன்?

தமிழ் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டுமக்களுக்கு மட்டுமல்ல உலகில் பரந்துவாழும் தமிழ் மக்கள் அனைவருக்குமே கவலையளிப்பதாகும். நமது நாட்டைப்பொறுத்தவரையில் தமிழ் மக்கள் விடுதலை காணவேண்டுமென்று 'தமிழர் விடுதலை முன்னணி' என்ற இயக்கமே இயங்கி வருகிறது.

ஆனாலும் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் இச் சமயத்தில் எந்தத் தொகுதியில் எவர் கேட்பது என்பது பற்றிக் கட்சிகளுக்கிடையிலும் கூட்டணிக்குள்ளும் சர்ச்சை ஏற்பட்டிருப்பது யாருக்கும் மகிழ்ச்சி தரமுடியாது.

தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் பல கட்சிகளும் பல வேட்பாளர்களும் போட்டிக்கு நிற்பதென்றே தமிழ் மக்கள் விடுதலை என்ற கோஷம்வெறும் தேர்தல் கோஷம்தான் என்ற அபிப்பிராயத்தை தமிழரல்லாதவர் மனத்தில் பதித்து விடுமென்று சொல்வது தவருகாது.

தமிழ்நாட்டில் நடக்கும் சம்பவங்களும் நமது நாட்டில் தேர்தலை எதிர்பார்த்து நடைபெறும் நிகழ்ச்சிகளும் தமிழனுக்கு ஒரு நாடு வந்தால் எப்படி இருக்குமென்று சந்தேகக் கண்கொண்டு கேட்பவர்களின் வாய்க்கு 'அவல் கிடைத்த' மாதிரி அமைந்துள்ளன.

## "ஜே. ஆர். இப்போதுதான் சோஷலிஸத்தின் காவலர்"

—பெர்னட் சொய்சா எம்.பி.

கொழும்பு, வியாழன்

"ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன் ஒரு சமயம் சோஷலிசத்துக்கும், சோஷலிஸக் கட்சிகளுக்கும் பெரும் வைரியாக இருந்தார். இப்போது அவர் சோஷலிஷத்திற்கும் சோஷலிய சிந்தனைகளுக்கும் காவலனுக மாறியிருக்கிறார்" என்று கொழும்பு தெற்கு எம். பி. திரு. பெர்னட் சொய்ஸா கூறினர்.

மக்கோனவில் நடைபெற்ற சமசமாஜக்கட்சியின் ஒரு பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

(7-ம் பக்கம் பார்க்க)

# நாவலப்பிட்டியில் நாளை சாகித்திய விழா

நாவலப்பிட்டி, வியா.

இலங்கை கலாச்சாரப் பேரவைத் தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழுவின் சாகித்திய விழா இம்மாதம் 23 ம் திகதி சனிக்கிழமை நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

கலாச்சார அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோன் இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழுவினுல் நடத்தப்பட்ட சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம், கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசு வழங்குவார்.

காலை நிகழ்ச்சியில் "மக்களும் இலக்கியமும்" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கும் "நாட்டு மக்கள் நலமுற்று வாழ" என்ற தலைப்பில் கவியரங்கும் நடைபெறும்.

திரு கி. இலட்சுமணஐயர் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் கலாநிதி அ. சண்முகதாஸ், திரு. எஸ். இளங்கீரன், திரு. க சண்முகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

ஜனப் எம். ஏ. நுஃமான் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் திருவாளர்கள் உ சேரன், க. ஆதவன், எம். சடாச்சரன், ஏ. பி. வி. கோமஸ், மூதூர் முகைதீன், சாரணா கையூம் ஆகியோர் கலந்துகொள்வர்.

பிற்பகல் நிகழ்ச்சி யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவுடன் பலர் உரை நிகழ்த்துவர்.

இறுதியில் நடைபெறும் கலை நிகழ்ச்சியின்போது நாட்டுக்கூத்து, நாடகம், திரைப்படம் ஆகியன நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆதமஜோதி முத்தையா தலைமையிலான அமைப்புக்குழு கவனித்துவருகிறது. (இ)

## இலக்கியப் போட்டி முடிவுகள்

இலங்கைக் கலாச்சார மன்றத்தின் இலக்கியப் பகுதியின் 1976ம் ஆண்டிற்கான இலக்கியப் போட்டிமுடிவுகள்:

### 1. சிறுகதைப் போட்டி

1ம்பரிசு: ரூபா 200 'மண்ணில் தெரிவது வாழ்வு' எஸ். ஜெகநாதன், குண்டசாலை.

2ம் பரிசு: ரூபா 150 'நாணயக்கயிறு' சி. இராஜசிங்கம் [சுதாராஜ்], புத்தளம்.

3ம் பரிசு: ரூபா 100 'துலங்கும் தீபங்களும் துடிக்கும் இதயங்களும்' திக்குவல்லை கமால் திக்குவல்லை.

### 2 கவிதைப் போட்டி

1ம் பரிசு: ரூபா 200 'புன்னகைபூக்கும் புதிய பெருநாள்' திக்குவல்லை - கமால், திக்குவல்லை.

2ம்பரிசு: ரூபா 150 'ஏங்காத வாழ்வைஎழுதுவோம்' புதுவை இரத்தினதுரை, திருக்கோணமலை.

3ம் பரிசு: ரூபா 100 'தாத்தா சொன்ன கதை' என். சண்முகலிங்கன், கொழும்பு-6.

### 3 கட்டுரைப் போட்டி

1ம் பரிசு: ரூபா 150 'மக்களும் இலக்கியமும்' விஜயலட்சுமி சச்சிதானந்தன், பருத்தித்துறை.

2ம் பரிசு: ரூபா 100 'மக்களும் இலக்கியமும்' க. சதாசிவம் பண்டாரவளை.

3ம் பரிசு: ரூபா 75 'மக்களும் இலக்கியமும்' என். சண்முகலிங்கன், கொழும்பு-6.

### 4 ஓரங்க நாடகப்போட்டி

1ம் பரிசு: ரூபா 200 'எரியும் பிரச்னைகள்', ஆ. இராஜகோபால், யாழ்ப்பாணம்.

2ம் பரிசு: ரூபா 150 'ஏன் இந்தக் கோலம்?' க. சதாசிவம்.

3ம் பரிசு: வழங்கப்படவில்லை பண்டாரவளை.

## பேராதனை வளாக தமிழ்ச்சங்க பொன்விழா

கண்டி, வியா.

இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக தமிழ்ச் சங்க பொன்விழா இம்மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் வளாகத்தில் நடைபெறுகிறது.

முதல்நாள் காலை நிகழ்ச்சிகளை கலைஅரங்கத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கொடியேற்றி ஆரம்பித்து வைப்பார் திரு. சி. நவரத்தினம் தலைமைவகிப்பார்.

பொன்விழா மலர்வெளியீடு டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும். திரு. இ. சிவகுருநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். முதற்பிரதியை பொறியியல்பீடாதிபதி பேராசிரியர் க. துரைராஜா வாங்குவார்.

மாலை நிகழ்ச்சியான நினைவரங்கு பொறியியல்மண்டபத்தில் நடைபெறும். முன்னாள் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. மு. ஸ்ரீ சண்முகராஜா தலைமையில் நடைபெறும். சமூக வாழ்வில் திரு சு. தேவதாஸ், கலைவாழ்வில் திரு. சி. மௌனகுரு, ஜனப் செ. மு. ஹனிபா, இலக்கிய வாழ்வில் செங்கைஆழியான், கலாபரமேஸ்வரன், டாக்டர் சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவர்.

'காந்தியம் காலம்கடந்ததா?' என்னும் பொருள் பற்றிய விவாத அரங்கில் யாழ் - பேராதனை வளாக மாணவர்கள் பங்குபற்றுவர். ஜனப் ஏ. ஜமீல் தலைமை தாங்குவார்.

அக்கினியின் கர்ப்பத்தில் அவனிகளை உருவாக்கும் மக்கள் இனம் சீறிவிட்டால்..." என்ற தலைப்பிலான கவியரங்கு பொறியியல் மண்டபத்தில் நடைபெறும். கவிஞர் காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை, நெல்லை நடேசன், இரத்தின விக்கினேஸ்வரன் ராஜபாரதி ஆலன் திருக்கோணமலைக் கவிராயர் ஆகியோர் பங்குபற்றுவர். சில்லையூர் செல்வராஜன் தலைமைவகிப்பார்.

நடனம், புல்லாங்குழல், நாட்டுப் பாடல் கச்சேரி, நாடகம், ஆகியனவும் இடம் பெறும்

இரண்டாம்நாள் நிகழ்ச்சி பொறியியல் மண்டபத்தில் நடைபெறும். திரு. சி. தில்லைநாதன் தலைமையில் காலை நடைபெறும் எழுத்தாளர் அரங்கில் கலாநிதி கா. சின்னத்தம்பி, எஸ் பொன்னுத்துரை, கே. டானியல் ஆகியோர் உரையாற்றுவர்.

மாலை நிகழ்ச்சியாக இசை அரங்கில் செல்வி கலாநாயகி சின்னத்தம்பின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ)

## நாடெங்கும் பரவும் புதுவிதக் காய்ச்சல்

கொழும்பு, வியாழன்

நாட்டின் பலபாகங்களிலும் 'டிங்கி' என்று சொல்லப்படும் புதுவிதக் காய்ச்சல் பரவிவருவதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக குழந்தைகள், பலஹீனமானோர் ஆகியோரையே இந்நோய் பாதிக்கிறதாம்.

வாந்தி, மலத்துடன் இரத்தம் செல்வல், குளிர் திடீர் மயக்கம் என்பன இந்நோயின் அறிகுறிகள் என்று கூறப்பட்டது.

இந்நோய் பிடித்ததாகக் கண்டால் தாமதமின்றி ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது (உ)



பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் பொன்விழாக் கொண்டாடும் தமிழ்ச் சங்க செயற்குழு.

# காங்கிரஸ் வாலிபர்களை ஒன்று திரட்டுவது கூட்டணியைப் பலப்படுத்தவே

—ஆர்.பரமேஸ்வரன்—

(த. கா. வாலிபமுன்னணி அமைப்பாளர், சாவகச்சேரி)

அன்புள்ள

பொ. கிருபானந்தன்,

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிபற்றித் தாங்கள் 12-4-77 'ஈழநாடு' இதழில் எழுதியிருந்தீர்கள். இம்முன்னணிபற்றித் தவறுகப் புரிந்து விட்டீர்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியைப் பலப்படுத்தலே தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி திரு. குமார் பொன்னம்பலம் தலைமையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

70 ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்க்காங்கிரசுக்கு ஒரு லட்சத்துப் பதினையாயிரம் வாக்குகள் கிடைத்தன, வட்டுக்கோட்டை, கிளிநொச்சி, நல்லூர்த்தொகுதிகளில் வெற்றி பெற்றும். பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வவனியா முதலான தொகுதிகளில் ஆயிரத்திற்குட்பட்ட வாக்குகளால் வெற்றிபெறும் வாய்ப்பை இழந்தோம் தேர்தலின்பின்னர் தமிழ்க்காங்கிரஸ் தலைமைப்பீடம் தமிழரின் ஒற்றுமையைக் கருதிக் கூட்டணியுடன் இணைந்தது. சிலர்காங்கிரஸ் தலைமைப்பீடம் இயங்காததனுல் வேறு கட்சியில் சேர்ந்து இயங்கும் சூழ்நிலை ஏற்பட்டது. கூட்டணியில் 7 தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் சேர்ந்தியங்கினர். ஆனுல் தலைவர் திரு. பொன்னம்பலம் கடந்த தேர்தலில் போட்டியிட்ட திரு. எஸ். ரி. சிவஞானம், திரு. சிவநேசன் திரு. ரி. குணரத்தினம், திரு. வி. குமாரசாமி உட்படத் தமிழ்க்காங்கிரஸ் கமிட்டியிலுள்ள அறுபத்துமூன்றுபேரில் ஐம்பத்தாறுபேர் கூட்டணியுடன் இணைந்து செயலாற்றுதபோதிலும் கூட்டணி நடவடிக்கைகளுக்குவெளியில் இருந்து ஆதரவு வழங்கிவந்தனர். இந்த 56 பேரும் கூட்டணிக் காரியாலயத்துக்குச் சென்றது மில்லை; கூட்டணி மேடைகளில் ஏறியதுமில்லை. இவர்களைக் கூட்டணியில் இணைத்துச் செயலாற்றக் கடந்த ஐந்து வருட காலத்தில் கூட்டணித் தலைமைப்பீடமோ, இளைஞர் பேரவையோ எடுத்த நடவடிக்கை என்ன? 7 காங்கிரஸ் பிரமுகர்கள் மட்டும் சேர்ந்துவிட்டால் அது கூட்டணியாகிவிடுமா? இதே போல் ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரக்கணக்கான காங்கிரஸ் வாலிபர்களும் ஆதரவாளர்களும் கூட்டணியுடன் எவ்வித தொடர்புமில்லாமல் தனித்து இயங்கிவருகிருர்கள். இவர்களை ஒன்றுதிரட்டிக் கூட்டணிக்குப் பக்கபலமாகநின்று போராடுவதற்கு திரு. குமார் பொன்னம்பலம் முயன்றுவருகிருர். இதைத் தவறென்று எந்தத்தமிழனும் கூறமுடியுமா?

## இளைஞர் பேரவையும் த. கா. வாலிப முன்னணியும்

இளைஞர் பேரவையில் தமிழரசு வாலிபமுன்னணி எல்லோரும் சேர்ந்துவிட்டார்கள் என வண்ணை ஆனந்தனே 31-3-77 'ஈழநாடு' இதழில் கூறியிருக்கிருர், அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். தமிழரசு வாலிப முன்னணிதான் இளைஞர் பேரவையாக உருமாறி இருக்கிறது. காங்கிரஸ் வாலிபமுன்னணியைச் சேர்ந்த கொக்குவில் சிவதாசனையும், யாழ்ப்பாணம் செந்திலையும் தவிர இளைஞர் பேரவையில் வேறு காங்கிரஸ் வாலிபர்கள் யாராவது இருக்கிருர்களா? அப்படி இருந்தாலும் அவர்களுக்கு முக்கியபதவிகள்கொடுக்கப்பட்டிருக்கின்றதா? வடமாகாணத்தில் எந்தத்தொகுதியிலாவது இளைஞர் பேரவையிலுள்ள காங்கிரஸ் வாலிபர்கள் இளைஞர் பேரவை அமைப்பாளராக இருக்கிருர்களா? இதனுல் ஒவ்வொரு தொகுதியிலும் தங்கள் எதிர்காலம் என்னஎன்ற நிலையில் இருக்கும் தமிழ்க்காங்கிரஸ் வாலிபர்களை ஒன்றுதிரட்டி அவர்கள் சக்தியைக் கூட்டணிக்குப் பக்கபலமாக அளிக்கவே திரு. குமார் பொன்னம்பலம் பாடுபடுகிருர். இதில் என்ன தவறு இருக்கிறது?

20-3-77ல் சாவகச்சேரிச் சந்தையில் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பொதுச்சபை கிராமரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டது. தமிழர் கூட்டணிக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட சாவகச்சேரித் தொகுதி வாசிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்தனர். கூட்டணியில் அக்கறைகொண்டிருந்த நானும் அக்கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு என்னைத் தவிர எல்லோரும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களாக இருந்தனர். தமிழ்க்காங்கிரஸ் வாலிபர்கள் எவரையுமே காணவில்லை. என்னைப்போல அக்கூட்டத்திற்கு வந்த எல்லோரும் அவதானித்திருப்பார்கள். இக்கூட்டத்தில் என்னையும் மீசாலை வடக்கு உறுப்பினராகத் தெரிவுசெய்தனர். யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்திற்கு வந்த மற்றும்தொகுதி வாலிபர்களும் இந்தநிலைதான் தங்கள்தொகுதியிலும் இருப்பதாகக் கூறினர்கள். இந்தநிலை நீடிக்க விடலாமா? காங்கிரஸ் வாலிபர்களைக் கூட்டணியில் சேர்க்க இளைஞர்பேரவையினர் என்ன முயற்சி எடுத்தார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் தமிழரசு வாலிபர்கள்கூடி இளைஞர்பேரவை அமைத்துக்கொள்வதும் தங்களில் ஒருவரையே இளைஞர்பேரவை அமைப்பாளராகத் தாமாகவே பகிரங்கப் படுத்துவதும் சரியா? காங்கிரஸ்வாலிபர்களை ஒன்றுதிரட்டிக் கூட்டணியைப் பலப்படுத்துவதுதான் எமது நோக்கம்.

## இளைஞர் பேரவையில் சேரமாட்டார்கள்

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியைக் கலையுங்கள் எனக் கவிஞர் காசிஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த வேண்டுகோளின்படி காங்கிரஸ் வாலிப முன்னணி கலைக்கப்பட்டால் என்ன நடக்கும்? நிச்சயம் அவர்கள் இளைஞர் பேரவையில் சேரமாட்டார்கள். தனிநாடு சுயாட்சிக்கொள்கையுடைய தமிழர் சுயாட்சிக்கழகம், கம்யூனிஸ்ட் கட்சி ஈழத்தொண்டர்சபை ஆகியவற்றிலேயே சேருவார்கள். அல்லது சிலசமயம்புதிய விடுதலை இயக்கத்தை ஆரம்பிப்பார்கள். இதனுல் ஒவ்வொரு தொகுதியிலும் கூட்டணி பெருமளவில் பாதிக்கப்படும். இந்த நிலையைத் தடுக்கவே தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி பாடுபடுகிறது.

## முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கு அங்கிகாரம்

தமிழர் கூட்டணியில் தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்றும் சேர்ந்து இயங்குகின்றன. தமிழ்க்காங்கிரஸைக் கலைக்கும்படி கூறுபவர்கள் ஏன் இலங்கைத் தொழிலாளர் காக்கிரஸைக் கலைக்கும்படி கூறத் தயங்குகிருர்கள்?

அதுமட்டுமல்ல கவிஞர் காசி ஆனந்தனின் சொந்த இடமான கிழக்கு மாகாணத்திலேயே அண்மையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணி ன்று உருவானது. அதனைக் கூட்டணித் தலைமைப்பீடம் அங்கிகரித்துப் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டணியில் நான்காவது கட்சியாக ஏற்றுக் கொண்டது. இது கவிஞர் காசி ஆனந்தனுக்குத் தெரியாததா? கூட்டணியில் உள்ள முஸ்லிம் ஐக்கிய முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனியாக இயங்கும் போது தமிழ்க் காங்கிரஸ் மட்டும் தனியாக இயங்குவதில் தவறென்ன? தமிழர் சுயாட்சிக் கழகத்தையும் கூட்டணியில் ஐந்தாவது கட்சியாகச் சேர்த்துக் கொள்ளப் பேச்சுவார்த்தை நடப்பதையும் இங்கு கூறவிரும்புகிறேன்.

## கூட்டணித் தீர்மானத்திற்கு மாறு

மலைநாட்டுத் தமிழர்கள் இ. தொ. கா. மூலம்தான் கூட்டணியில் இயங்க முடியும். இதே போல் கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்கள் முஸ்லிம் ஐக்கிய முன்னணி மூலம்தான் கூட்டணியில் இயங்கமுடியும். இதேபோல் தான் வடக்கில் உள்ள தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களும் தமிழ்க் காங்கிரஸ் மூலம்தான் கூட்டணியில் இயங்க முடியும். இந்த உண்மையைத் தாங்களும், தமிழ் இளைஞர் பேரவையினரும் உணர வேண்டும். இதனைவிட்டு மலைநாட்டிலோ, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியிலோ, வடக்கிலுள்ள காங்கிரஸ் ஆதரவாளர்கள் மத்தியிலோ கூட்டணிக் கிளைகளை அமைத்து இயங்குவது என்றுமே சாத்தியமாகாது. கூட்டணி மூன்று கட்சிகளைக் கொண்டது என்பதனுல் தான் வட்டுக்கோட்டை மாநாட்டில் மூன்று கட்சித் தலைவர்களும் கூட்டுத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இந்த முடிவுக்கு மாருக கூட்டணியில் உள்ள கட்சிகளைக் கலையுங்கள் என கவிஞர் காசி ஆனந்தன் கூறுவது கூட்டணித் தீர்மானத்திற்கு முரணனதாகும்.

## விடுதலை இயக்கத்தில் பங்கு

தமிழ் காங்கிரஸ் விடுதலை இயக்கத்தில் என்ன பங்கு எடுத்தார்கள் என இளைஞர் பேரவையினர் கேட்கின்றனர்.

1. கூட்டணி எம். பி.க்களில் நீதிமன்றத்திலே சட்டத்தை மீறித் துண்டுப் பிரசுரம் விநியோகித்து நீதிபதியால் தண்டிக்கப்பட்டுச் சிறை சென்ற ஒரேஒரு எம். பி. ஆனந்தசங்கரிதான். இவர் சிறை சென்ற சமயம் காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளராக இருந்தார். இவருடன் மற்றும் 5 தமிழ்க் காங்கிரஸ் வாலிபர்கள் சிறை சென்றனர்.

2. சட்டத்தை மீறி யாழ் பஸ் நிலையத்தில் துண்டுப்பிரசுரம் விநியோகித்து நமது தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

3. சிறையில் தமிழ் இளைஞர்கள் உண்ணுவிரதம் இருந்த சமயம் அவர்களுக்கு ஆதரவாக வவனியாத் தொகுதியில் நமது தலைவர் திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் நூற்றுக்கணக்கான காங்கிரஸ் வாலிபர்கள் உண்ணுவிரதமிருந்தார்கள்.

4. யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் போது பொலிஸ் தாக்குதலுக்குக் கொடிகாமம் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிச் செயலாளர் திரு. வி. யோகநாதன் பலியானுர்.

## தியாகத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை

எங்கள் தலைவர்கள் தீவிரமான திட்டங்களைத் தீட்டி நாள் குறித்துப் போராட்டத்துக்கு அழைத்திருந்தால் காங்கிரஸ் வாலிபர்கள் ஆயிரக்கணக்கில் குதித்திருப்பார்கள். கடந்த காலத்தில் கூட்டணித் தலைமைப் பீடத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள் மட்டுமே மிகக் குறைவான அளவு போராட்டத்தில் கலந்து கொள்ள கூட்டணி அனுமதித்ததால் எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. வாலிபர்கள் நேரடியாக ஆயிரக்கணக்கில் கலந்துகொள்ளக் கூடிய எந்தப் போராட்டத் திட்டமும் கூட்டணி அமைக்கப்பட்ட 5 வருட காலத்தில் முன்வைக்கப்படவில்லை. நோட்டீஸ் ஒட்டுவது நோட்டீஸ் கொடுப்பது, முத்திரை இன்றித் தபால் அனுப்புவது, கடிதங்கள் அனுப்புவது போன்ற போராட்டங்கள் அதுவும் கூட்டணித் தலைமைப் பீடத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட தொண்டர்களால் (தமிழரசுக் கட்சி) நடத்தப்பட்டது. இந்த நிலையில் காங்கிரஸ வாலிபர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்பதில் அர்த்தமில்லை.

இரண்டு வருடத்திற்குப் பாடசாலைப் பிள்ளைகளைப் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறும் வேறுபல அரிய போராட்டத் திட்டங்களையும் தமிழ்க் காங்கிரஸ் சமர்ப்பித்தபோதும் கூட்டணி அதனை அங்கீகரிக்கவில்லை. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைத் தொடர்ந்து திரு. ஆனந்தசங்கரி பதவியை ராஜினுமா செய்து போட்டியிட முன்வந்தார். அதனையும் கூட்டணி ஏற்கவில்லை. பின்னர் தமிழ்க் காங்கிரசைக் குறை சொல்லலாமா?

தேர்தல் எமக்கு முக்கியமில்லை. அதற்காக வாலிப முன்னணி புனரமைப்புச்செய்யப்படவில்லை. தனிநாடு இலட்சியத்தை அடைவதற்காகவே காங்கிரஸ் வாலிபசக்தி ஒன்று திரட்டப்படுகிறது. காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடா நிலைமை வரினும் தொடர்ந்து கூட்டணி இலட்சியத்திற்காகத் தீவிரமான திட்டங்களைத் தீட்டி ஆட்சிமன்றத்திற்கு வெளியில் போராடத் தயாராக இருக்கிறேம்.

## விவாதமேடை

---

யாழ் ஏ. ஜி. ஏ. பிரிவு

# விளையாட்டு விழா இன்று ஆரம்பம்

நல்லூர், வெள்ளி

விளையாட்டமைச்சின் யாழ்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலமைந்துள்ள சனசமூகநிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றிற்கிடையிலான விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி ஞாயிற்றுக் கிழமைவரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் மெய்வல்லுநர் போட்டியுடன் விழா ஆரம்பமாகின்றது. கரபந்தாட்ட சாம்பியன் மோதலில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் பொலிஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது மாலை 16 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்ட சாம்பியன் மோதலில் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

நாளை பிற்பகல் மெய்வல்லுநர் போட்டி ஆரம்பமாகின்றது. உதைபந்தாட்ட 'பி' பிரிவுக்கான சாம்பியன் மோதலில் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென் நிக்கிளஸ் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை மெய்வல்லுநர் போட்டி ஆரம்பமாகின்றது. வலைப்பந்தாட்ட சாம்பியன் மோதலில் கொலிவபிலி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பமிலியன் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. மாலை 4-30 மணிக்கு உதைபந்தாட்ட ஏ பிரிவுக்கான சாம்பியன் மோதலில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக பீ பிரிவு கோஷ்டி மோதுகின்றது.

யாழ். பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக்ஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விளையாட்டு விழாவிற்கு யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ. ஏ. ஜோசேப்பும்திருமதி ஜோசேப்பும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கின்றனர், யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் கௌரவ விருந்தினராக கலந்து கொள்கின்றார்.

விளையாட்டுவிழா தொடர்பான ஏற்பாடுகளை விளையாட்டதிகாரியான திரு. ரி. நடராசா கவனித்துவருகிறார். (உ)

## இஸ்லாமிய ஆசிரியர் விழா

கொழும்பு, வியாழன்

அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் இம்மாதம் 24-ம் 25-ம் திகதிகளில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

நாட்டின் பலபாகங்களிலும் இருந்து சுமார் ஐயாயிரம் முஸ்லிம் ஆசிரிய, ஆசிரியைகள் இவ் வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்துமட்டும் இரண்டாயிரம் ஆசிரிய, ஆசிரியைகள் கலந்து கொள்கின்றனர். இதனையொட்டி விசேட போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன

பொதுக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் வதியுதீன் மாஹ்மூத் முஸ்லிம் பிரதி அமைச்சர்கள், எம். பீக்கள், வெளிநாட்டுத்தூதுவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்? (உ)

## 3 வருடத்திற்கு நீடிப்பு

சாவகச்சேரி, வியா.

திரு. கே. சரவணமுத்துவை தலைவராகக் கொண்ட வரணி இணக்க சபையை மேலும் மூன்று வருடங்களுக்கு நீதியமைச்சர் நீடிக்க உத்தரவளித்துள்ளார். (க)

அளவெட்டி இரட்டைக் கொலை

# இருவருக்கு மே-2 வரை றிமாண்ட்; நால்வரை பொலிஸ் தேடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி இரட்டைக் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் இருவர் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. யேசுரத்தினத்தின் உத்தரவின் பேரில் மே மாதம் 2-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளனர்.

சுன்னுகம் பொலிஸ்பகுதியைப் பெரும் பரபரப்பில் ஆழ்த்தியுள்ள இப் பயங்கர இரட்டைக்கொலைச் சம்பவம் சம்பந்தமாக சுன்னுகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் இ. ஏ. ஏ. காதர் நடத்திவரும் தீவிர புலன்விசாரணைகள் மூலம் புதிய தகவல்கள் பல வெளி வந்துள்ளன.

உடுவிலைச் சேர்ந்த ஆர். சண்முகம் (வயது 35) குரு நகரைச் சேர்ந்த எம். மகேந்திரன் (வயது 29) என்ற இருவருமே துப்பாக்கி வேட்டைக்கு இலக்காகி மரணமானவர்களாவர்.

சண்முகம் ஒரு சீவல் தொழிலாளி, மகேந்திரன் மேசன் தொழிலாளியாவார்.

இத் துப்பாக்கிச்சூட்டில் தெய்வேநதிரன் (வயது 25) என்ற அளவெட்டியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியும், சி. செல்வநாயகம் (வயது 20) என்ற தொழிலாளியும் காயமுற்று தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவவேளை அரசக்கோன் என்பவரும் கல்லடிக்கு இலக்கானுர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் காதர் நடத்திய விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாவது: சம்பவம் நடந்ததற்கு மூன்று நான்கு தினங்களுக்கு முன் வயிரமுத்து செல்லன் (வயது 52) என்ற அளவெட்டி வாசியின் மகன் செல்வராஜா (வயது 11) என்பவருக்கும் கந்தையா என்பவரின் மகனுக்குமிடையில் தகராறு ஏற்பட்டபோது தெய்வேந்திரன் என்பவர் (துப்பாக்கிச்சூட்டுக் காயத்துக்குள்ளானவர்) அவர்களை விலக்குப்பிடித்துவிட்டாராம்.

பின்னர் 17-ம் திகதி செல்லனின் வீட்டுக்குச் சென்ற ஒரு கோஷ்டி அவரது மகனின் அன்றையதினத் தகராறுபற்றி ஏசியதாம். இதுபற்றி செல்லனின் மகள் சுன்னுகம் பொலிஸில் புகார் ஒன்றினைச் செய்ததனையடுத்து இருபகுதியையும் விசாரணைக்கு பொலிஸ்நிலையம் வருமாறு இன்ஸ்பெக்டர் காதர் உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிடையில் சம்பவதினம் மாலை 4 மணியளவில் கொலையுண்ட இருவரும் கந்தையாவின் வீட்டிற்குச் சென்றனராம். வாக்குவாதம் வலுப்பட்டு இரு கோஷ்டியினர் மத்தியிலும் கல்வீச்சு நடைபெற்றதாம்.

## துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன

இதனையடுத்து செல்லத்தம்பி என்ற சந்தேகநபரின் துப்பாக்கியில் இருந்து இரு தடவை வேட்டுத் தீர்க்கப்பட்டதாம்.

சண்முகமும், மகேந்திரனும் துப்பாக்கிக்குண்டுகள் உடலைத் துளைத்த நிலையில் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனராம்.

தெய்வேந்திரன், செல்வநாயகம் ஆகியோர் மீதும் துப்பாக்கிச்சன்னங்கள் பாய்ந்தனவாம். இந்த இரட்டைக் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இன்ஸ்பெக்டர் காதர் எஸ். செல்லத்தம்பி என்ற சந்தேகநபர் உட்பட நான்கு நபர்களை வலைவீசித் தேடிவருகிறுர்.

மேற்படி பகுதியில் கொந்தளிப்பு நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வகையில் அவர் பொலிஸ்பந்தோபஸ்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளார். (உ)

# வட்டு. ஊர்மன்ற புதிய தலைவர்



வட்டுக்கோட்டை ஊர்மன்றத்தின் தலைவராக வட்டு. மேற்கைச் சேர்ந்த நாகேசு அமிர்தலிங்கம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சமூகசேவகரும் பிரபல வர்த்தகருமான இவர் 11-ம் வட்டார உறுப்பினராவார்.

முன்னர் இம் மன்றத்தின் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு. சபாரத்தினம் நிற்சிங்கத்தின் இடத்திற்கே திரு. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(சுழி. நி-இ)

# 5 ரூபா தகராறு

## படுகொலையில் முடிந்தது

மொனருகல, வியா.

சூதாட்டத்தின்போது எழுந்த 5 ரூபா பிரச்னை ஒரு கொலையில் முடிந்ததாம்.

எகொடவத்தையைச் சேர்ந்த ஆர்னேலிஸ் அப்புஹாமி (வயது 67) என்ற வயோதிபரே இப்பிரச்னையில் கொலைசெய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். மற்ருெரு சந்தேக நபரைத் தேடி வருகின்றனர்.

சூதாட்டத்தின்போது கொலையுண்டவரிடம் சந்தேக நபர்கள் ஐந்து ரூபா கேட்டதாகவும் இதற்கு அவர் மறுக்கவே பொல்லால் அடித்தும் கத்தியால் குத்தியும் அவர் கொலை செய்யப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (உ)

## ட்ரொலி பஸ்கள் வேண்டுமாம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு வீதிகளில் மீண்டும் ட்ரொலி பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கொழும்பு மாநகர சபையின் பாமன்கடை உறுப்பினர் திரு. ஆனந்தபிரேமசிங்க அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இவரது பிரேரணை கொழும்பு மாநகர சபையில் இம்மாதம் 25-ம் திகதி விவாதிக்கப்படவிருக்கிறது. (உ)

## ஜனதிபதி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பைப் பெருத காங்கிரஸ் கட்சிக்கு அம்மாநிலங்களில் எப்படி ஆட்சி செய்யமுடியும் என்பதுதான் எமக்குத் தெரியவில்லை.

மகாராஷ்டிரத்தில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி பெருந்தோல்விஅல்ல ஆகவேதான் அங்குஆட்சியைக் கலைக்குமாறு நாம் கோரவில்லை.

இதேவேளையில் உள்துறை அமைச்சரின் திட்டம் குறிப்பிட்ட 9 மாநில அரசுகளையும் கவிழ்க்கும் முயற்சியேயாகும் என்று ஹரியானு, மேற்கு வங்காள முதல் மந்திரிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர். (இ)

## இன்று

நல்லூர், வெள்ளி

அராலி வடக்கு மண்டையன் திடல் வீரகத்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல விழா இன்று மாலை அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து நடைபெறும் கலை நிகழ்ச்சியில் விசேட அம்சமாக வி.கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினரின் மேளக்கச்சேரியும், ராதாகிருஷ்ணன்குழுவினரின் வயிலின் இசையும் இடம் பெறும். உ

## பன்சிலாலைக் கைது செய்யக் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 21

இந்திராகாந்தியின் மந்திரி சபையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. பன்சிலாலை உடனடியாகக் கைதுசெய்யுமாறு முன்னுள் ஹரியானு முதல்மந்திரி திரு. பகவத் தயாள் சர்மா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

திரு. சர்மாலோக சபையில் இப்போது காங்கிரஸ் உறுப்பினராக இருக்கிருர். (இ)

## சோவியத் கம்யூனிஸ்ட் உறுப்பினர் - பீட்டர் சந்திப்பு

மாஸ்கோ, ஏப். 21

சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் அரசியல்குழு உறுப்பினர் திரு. பொரிஸ் பொனெமரயேவ் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பீட்டர்கெனமனை கிரெம்ளினில் சந்தித்தார்.

சோ. க. க. 25வது காங்கிரஸ் முடிவுகளின் செயலாக்கம் அக்டோபர் சோஷலிஸப்புரட்சியின் 6வதுஆண்டை நெருங்கி வரும்போது சோவியத் மக்கள் கம்யூனிஸ நிர்மாணத்தில்சகல துறைகளிலும் ஈட்டிய சாதனைகள், உலகப் பதட்டநிலையைத் தளர்த்துவதற்கும் சமாதான மக்களது பந்தோபஸ்தை உறுதிப்படுத்துவதற்குமான போராட்டம் என்பனகுறித்து பொரிஸ்பொனெமரயேவ்தெரிவித்தார்.

இருநாடுகளின் நலன்களுக்கும், ஆசியா மற்றும் உலகின் பிறபகுதிகளின் சமாதானம். பந்தோபஸ்து ஆகியவற்றுக்கும் அனுகூலமான வகையில் இலங்கைக்கும்சோவியத் யூனியனுக்கும் இடையிலும் இவ்விருநாடுகளின் மக்களுக்கிடையிலும் நட்புறவுகளும் பரஸ்பர அனுகூலமிக்க ஒத்துழைப்புகளும் நெருக்கமடைந்துவருகின்றன என்று இருதரப்பினரும் நம்பிக்கை தெரிவித்தனர். (இ)



தினசரி 4 காட்சிகள்
ராணி ஏ.வி.எம்.ராஜன்-காஞ்சனு
[யாழ்நகர்] நடித்த
வீர அபிமன்யு
29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தானபடைப்பு
நாளை நமதே

ராஜா ஏ.வி.எம்.ராஜன் - சாரதா
(யாழ். நகர்) முத்துராமன் - நாகேஷ்
[தினசரி 4 காட்சிகள்]
துலாபாரம்
(தமிழ் – புதிய பிரதி)

RIO (Jaffna) Daily 4 Shows
SAMSON THE MIGHTY
Color — Scope

ஸ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

11-வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily at 4-45,7-00&9-30 p.m. only
அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறர்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறர்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

## வண்ணை ஆலயத்தில் இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி
வண்ணை வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் இன்று சுக்கிரவார தினத்தை முன்னிட்டு இரவு 7 மணிக்கு ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு விசேஷ பூசையும் பின் அம்பாள் மஞ்சத்தில் உளவீதி வலம்வருதலும், இரவு 8 மணிக்கு அர்த்தஜாமப் பூசையும் இடம்பெறும். (உ)

## வில்லிசையும் பக்திஇசையும்

யாழ்ப்பாணம், வெள்ளி
நீர்வேலிக்கந்தசுவாமி கோவிலில் இன்று வெள்ளிக்கிழமைமுருகனுக்கு விசேஷ அபிஷேகஆராதனைகளும் பகல் திருவிழாவும் இரவு விசேஷ திருவிழாவில் கலை நிகழ்ச்சிகளாக திருப்பூங்குடி ஆறுமுகம் சகோதரர்களின் பக்தி இசை விருந்தும், வில்லிசையும் இடம் பெறும். (அ)

## கிருமி நாசினி தெளித்தவர் மயக்கம்

பண்டத்தரிப்பு, புதன்
தமது மிளகாய் தோட்டத்திற்கு கிருமி நாசினி மருந்து தெளிந்த வாலிபர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னத்துரை கந்தசாமி என்னும் 26வயது வாலிபரே இவ்வாறு மயக்க மடைந்தவராவர்.

## பின் போடப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அடுத்தமாதம் 9-ம் திகதி இரண்டாம் தவணைக்காக ஆரம்பமாகும்.
இம்மாதம் 28-ம் திகதி இக் கலாசாலை தொடங்குமென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. (இ)

## ஜே. ஆர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறை எம்.பி. திரு. சொலமன்டிலே குணவர்த்தன தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.
தெஹிவல-கல்கிஸ எம். பி. திருமதி விவியன் குணவர்த்தன உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 4-30, 7-00, 9-30
OUT OF SEASON
(Color - Adults only)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

விற்பனையாகின்றன:
1977-ம் ஆண்டுக்கான புதிய ஞானசுரபி வெளியீடு
புலமைப்பரிசிற் பாட்சை பயிற்சிகள்
5-ம் வகுப்பு
கடந்தகாலங்களில் பல்லாயிரக்கணக்கானமாணவர்கள் படித்துப் பயன் அடைந்தார்கள்.
பொது உளச்சார்பு: விலை ரூபா 5-00
கணிதப் பயிற்சி: ,, ,, 3-00
தமிழ்மொழிப் பயிற்சி; ,, ,, 3-00
ஞானசுரபி வெளியீடு எனக் கேட்டு வாங்குங்கள்.
வெளியீடு:
ஞானசுரபி புத்தகக் கம்பனி
217, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
5956

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இலக்கம்: MB/12947

நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு பொன்னம்மாவின் சட்டப்பிரதிநிதி கந்தையா கமலாதேவி, புதுரோட்டு, நல்லூர். வாதி

எதிராக

3-ம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
1. சின்னையா செல்வநாயகமும் அவரின் மனைவி
2. சுகிர்தமலரும்

பிரதிவாதிகள்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் MB / 12947-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ம் திகதி (1977-5-27) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியும் ரூபா 4040/ம், மேற்கொண்டு ரூபா 3000/-க்கும் 28-1-72 தொடக்கம் 14-11-72 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் இறுக்கும் வரை முழுத்தொகைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 442 / 45 சதமுமாகும். இவற்றில் ரூபா 500/- 18-7-75-ல் கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்ட யாழ்ப்பாணப் பகுதி, நல்லூர்க்கோவில்பற்று நல்லூரிலுள்ள "சோதுநிலையிட்ட ஆராய்ச்சி வளவு" என அழைக்கப்படும் நிலப்பரப்பு ஏழில் (7) வரன்பயிர் செய்பயிர்களும் கிழக்கு எல்லைக் காணியுள் அமைந்திருக்கும் பங்குக் கிணறும், கிழக்குப்பக்கமாக அமைந்த கிணற்றிற்குச் செல்லும் பாதையும் தண்ணீர் வாய்க்காலும் ரோட்டிலிருந்து வரும் ஒழுங்கையில் ஆரம்பமாகின்றன. இது முத்து சபாரத்தினத்தின் ஆதனமாகும்.
எல்லை வடக்கில் நாகநாதியின் கைம்பெண் கனகம்மாவினுதனம், எல்லை மேற்கில் சுப்பிரமணியம் இராமலிங்கத்தினதும் சங்கரப்பிள்ளை மகள் சின்னம்மாவினதும் மற்றைய பங்காளரினதும் ஆதனங்களும் எல்லை தெற்கில் ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவிலும் உள்ளன. இதனடங்கலும் பிரிபடாத ½ பங்காக உள்ளது.பதிவு இலக்கம் D 225 / 135.

2. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்ட வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவில்பற்று கோப்பாய் தெற்கில் அமைந்திருக்கும் "தாளையடி வயல்" என அழைக்கப்படும் வயல் காணி 25 பரப்பு. இதன் கிழக்கு எல்லையில் வெறுங்காணியும் வடக்கு எல்லையில் சுப்பிரமணியம் இராமலிங்கத்தினதும் வேலாயுதர் கணபதிப்பிள்ளையினதும் மற்றைய பங்காளரினதும் ஆதனங்களும், மேற்கு எல்லையில் கணபதி சிவகுருவினுதனமும் தெற்கு எல்லையில் நடைவரம்பும் உள்ளன. இவை முழுவதும் K 211 / 128-ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சி. ஆ. த. வடிவேலு J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்.
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
5-4-77

5967

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30 7-00, 9-30
Man at The Top

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்–நிர்மலா
வீட்டுக்கு வந்த மருமகள்


திரைக்கதைவசனம்: பாலமுருகன்

யாழ். வின்ஸர் வெண்திரையில்
22-4-77 இன்று முதல் குதூகல ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்
∴ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∴ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∴ சௌகார்ஜானகி, ∴ சுகுமாரி ∴ M.பானுமதி M R.R.வாசு
ஃ வி. கே. ராமசாமி ஃ சசிகுமார் ஃ மாஸ்டர் ரகுராமன் நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

ஈழநாடு

The EELANADU

காணி சுவீகரிப்பு

# பிரதமருக்கு தொண்டமான் தந்தி

கொழும்பு, வியாழன்

நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில் 7 ஆயிரம் ஏக்கர் காணி உடனடியாக சுவீகரிக்கப் படவிருப்பதனைக்கண்டித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான். பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு தந்தி அனுப்பி வைத்துள்ளார். பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் வேளையில் இவ்வித நடவடிக்கைகள் ஏற்கனவே வேலையற்றிருக்கும் நிரந்தரத்தொழிலாளர்களையும் பாதிக்கும் என அவர் அத்தந்தியில் சுட்டிக்காட்டியுள்ளார், (உ)

## ஆதரவற்றவரின் மரணசசடங்கை சக ஊழியர் நடத்தினர்

பண்டத்தரிப்பு, வியா.

ஆதரவற்ற தென்னிலங்கை வாலிபர் ஒருவரின் ஈமச்சடங்குகளை பண்டத்தரிப்பு கூட்டுறவுச்சங்க சகஊழியர்கள்நேற்று நடத்திமுடித்தனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிவந்த ஜே. பி.டி.சில்வா என்னும் தென்னிலங்கையைச் சேர்ந்த வாலிபர் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாகக் காலமாகி விட்டார்.

இவரது மரணம்பற்றி தென்னிலங்கையிலுள்ள இவரது உறவினர் என்று சொல்லப்படுபவருக்கு உடன் அறிவிக்கப்பட்டும் அங்கிருந்து எவரும் வரவில்லையாம். மிகவும் ஏழ்மைநிலையில் வாழ்ந்துவந்த அந்தவாலிபரின் மரணச்சடங்குகளைப் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து நிதிதிரட்டிச் செய்துமுடித்தனர். இறுதிச் சடங்குகள் பௌத்த சமய ஆசாரப்பிரகாரம் நடைபெற்றது. காங்கேசன்துறையிலிருந்துவந்த புத்தபிக்குஒருவர் சமயக்கிரியைகளை நடாத்தினர். (இ)

## ஐ. தே. க. மேதினம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும்ஐக்கியதேசியக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் வைத்து ஐ. தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சுகததாஸ உள்ளரங்கில் இருந்து நகரமண்டப மைதானம் வரை மாபெரும் ஊர்வலத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேதினஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக வடபகுதித் தொகுதிகளில் இருந்து வரும் தமிழ் அமைப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மலையகத்தில் இருந்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இம்முறை சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றிணைந்து மேதினக்கூட்டத்தைக் கொண்டாடவிருக்கின்றன. (உ)

## 'ஈழநாடு' விசேஷ அறிவித்தல்

'ஈழநாடு' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. எஸ். கே. காசிலிங்கம் 'ஈழநாடு' விசேஷ பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது ஈழநாட்டைப் பெற்றுக்கொள்வதிலுள்ள கஷ்டங்கள் விநியோக அபிவிருத்திக்கான யோசனைகளுக்கு விற்பனையாளர்களும், வாசகநேயர்களும் இவருடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in SriLanka.

கொடிகாமத்தில் சம்பவம்:

# நள்ளிரவில் நடந்ததாக்குதல்

## இன்ஸ்பெக்டரும் மகனும் காயம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமத்தில் நள்ளிரவில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வீட்டிற்குள் சென்ற ஆயுதம் தரித்த கோஷ்டியினர் நடத்திய தாக்குதலில் இன்ஸ்பெக்டரும், அவரது மகனும் பலத்த காயமடைந்து யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஸ்பெஷல் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி. எம். சண்முகநாதனும், அவரது மகன் எஸ். ஈஸ்வரநாதனுமே காயமடைந்தவர்களாகும். ஈஸ்வரநாதனுக்கு நேற்று முன்தினம் கையில் அவசர அறுவைசிகிச்சையொன்று நடைபெற்றது.

ஆறுபேர் கொண்ட கோஷ்டியினர் பயங்கர ஆயுதங்களுடன் வந்து தாக்குதல் நடத்தியதாகவும் ரொக்கம் சுமார் 3800 ரூபாவும், மற்றும் பல பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும் வீட்டுத் தளபாடங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சாவகச்சேரி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் புகாரில் சந்தேக நபர்களின் நால்வரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் நள்ளிரவு ஒரு மணியளவில் காயமடைந்தவரின் நான்காவது மகன் சாவகச்சேரி பொலிஸிற்கு நடந்துசென்று புகார் செய்ததைத் தொடர்ந்து அதிகாலை 3 மணிக்கு சப் இன்ஸ்பெக்டர் ஜெயவர்த்தன; சார்ஜன் வீரசிங்கம் ஆகியோர் விசாரணையைமேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. (க)

## கம்யூனிஸ்ட்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கான நடவடிக்கை எடுப்பதற்கு தோழர்கள் அ. வயித்தியலிங்கம் (காரியதரிசி), வ. பொன்னம்பலம் (அமைப்பாளர்), எஸ். நடராசா, ஐ. ஆர். அரியரத்தினம், க. நவரத்தினம் ஆகியோர் கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டது.

காரியநிர்வாக சபையில் எடுத்த தீர்மானங்களைத் தெரிவிக்க இம்மாதம் 24-ந் தேதி பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும்.

## விவசாயி தோட்டத்தில் வெட்டிக் கொலை!

### கொடிகாமம் கெற்பேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமத்தைச் சேர்ந்த கெற்பேலியில் நேற்றுக் காலை வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் என்ற விவசாயி அவரது தோட்டத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

சந்தேகநபர்கள் துவக்கு, கத்தி, கொட்டன்களுடன் தோட்டத்திற்குச் சென்றதாகவும் இறந்தவர் இவர்களைக் கண்டதும் ஓடியதாகவும் சந்தேக நபர்கள் துரத்திச்சென்று வெட்டியதாகவும் கூறப்படுகிறது.

சாவகச்சேரிப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரை பொலிசார் தேடிவருகின்றனர். (க-ஆ)

## கெனமன் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளரும் கொழும்புமத்தி எம். பி. யுமான திரு. பீட்டர் கெனமனும்கட்சியின் அமைப்பாளர் திரு. கே. பி. சில்வாவும் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத்தெரியவருகிறது.

கட்சியின் யாழ். மாவட்டப் பொதுச்சபைக்கூட்டம் இம்மாதம் 24-ந்தேதி நடைபெறும்போது அவர்களும் இதில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## 6 தொகுதிகளின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டணியின் ஒற்றுமையைக் குலைக்காத வகையில் சுமுகமான முறையில் வேட்பாளர் பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதாக ஒருபிரமுகர் தெரிவித்தார். (ம)

# வைத்திய உதவியாளர் சட்டப்படி வேலையை விஸ்தரிக்கமுடிவு

## சுகாதார அமைச்சரின் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வைத்திய உதவியாளர்களின் சட்டப்படி வேலை இயக்கத்தை விஸ்தரிப்பதென யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நேற்று நடைபெற்ற வைத்திய உதவியாளர்கள் சங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முக்கிய நகரங்களிலுள்ள பெரியாஸ்பத்திரிகளைச் சேர்ந்த வைத்திய உதவியாளர்கள் மட்டுமே இதுவரை சட்டப்படி வேலை இயக்கத்தில் ஈடுபட்டிருந்ததாகவும், இன்று முதல் ஏனைய பகுதி ஆஸ்பத்திரிகளிலும் இது விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதாவது இன்று முதல் சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, மந்திகை, தெல்லிப்பழை, கிளிநொச்சி, சங்கானை போன்ற ஆஸ்பத்திரிகளில் வைத்திய உதவியாளர்கள் சட்டப்படி வேலை செய்வார்கள்.

கடந்த 20 வருட காலமாக வருடாந்த சம்பள உயர்வில் மாற்றம் செய்யப்படவில்லை என்றும், சனி, ஞாயிறு, மற்றும் விடுதலை நாட்களில் பணி

### புறக்கணிப்பு

புரிபவர்களுக்கு மேலதிக வேதனம் வழங்கப்படுவதில்லை என்றும், தரமுயர்வு கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றும், இக்கஷ்டங்களை நிவர்த்தி செய்யுமாறு கோரியே தாங்கள் சட்டப்படி வேலை இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதாக மருந்தாளர் சங்கத்தைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தர் தெரிவித்தார். இதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப் பொறுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இயன் மருத்துவ உத்தியோகத்தர்கள்' ஆய்வுகூட உதவியாளர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்-றே தொழில் நுட்ப உதவியாளர்கள் போன்றோர் கடந்த பல நாட்களாக சட்டப்படி வேலை செய்துவருவதால் தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்ய இணக்கம் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர், ஏனைய கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் என்று கூறி, வேலைக்குத் திரும்புமாறு கோரிக்கை விட்டிருப்பதும், வழமையான வேலையை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் நோயாளரின் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா அறிவித்திருப்பதும் தெரிந்ததே. (ஆ)

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்க தகவல் பகுதியினரால் இலவசபடக்காட்சி இன்று மாலை 7 மணிக்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தில் காண்பிக்கப்பட இருக்கிறது. (ஆ)

## அமைப்பாளர் மறுப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா, முல்லைத்தீவுப் பகுதி தமிழ் இளைஞர் பேரவை அமைப்பு விடயமாக, தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை சந்திக்கவில்லை என வவுனியாத் தொகுதி இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. பீற்றர் பொன்கலன் தெரிவித்தார்.

திரு. சிவசிதம்பரத்தை, வண்ணை ஆனந்தனும் சந்திக்கவில்லை என்றும் கூறினர். (க-ஆ)

## நாளைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு நாளை யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணிக் காரியாலயத்தில் திரு. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வண்ணை ஆனந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

## பங்களாதேஷ் புதிய அதிபர்

டாக்கா, ஏப். 21

பங்களாதேஷின் ஜனாதிபதியாக பிரதம இராணுவ ஜெனரல் சியாபுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜனாப் ஏ. எம். சாயிம் சுகவீனம் காரணமாக ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இராணுவ ஜெனரல் ஜனாதிபதியாக இன்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். (ஆ)

## லெனின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், வியாழன்

லெனின் 107-வது நினைவு நாள் இம்மாதம் 25-ந் திகதி யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது. திரு. அ. வைத்தியலிங்கம் தலைமையில் நடக்கும் விழாவில் திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வீ. ஆனந்தசங்கரி, திரு. வே. யோகேஸ்வரன், திரு. மாவை சேனாதிராசா, திரு. வி. பொன்னம்பலம் ஆகியோர் இதில் கலந்துகொண்டு பேசுவர். (ஆ)